# கீதை:

## ஒரு சமுதாய விரோத நூல்

பெரியார்

வெளியீடு:

**முகில் ஊடகம்**

1 / 810 முத்தமிழ் நகர்

அடியனூத்து - அஞ்சல்

திண்டுக்கல் - 624003

*முகிழ் ஊடகம்: வெளியீட்டு எண் 2; முதல் பதிப்பு ஜூலை2013;*
*1 / 810 முத்தமிழ் நகர், அடியனூத்து, திண்டுக்கல் 624003;*
mukizhmedia@gmail.com
asuranoodakam@gmail.com

***கீதை: ஒரு சமுதாய விரோத நூல்***
***திருச்செங்கோடு செங்குட்டுவன்***

**©** *பதிப்பாளர்*

*கணினியாக்கம்: அசுரன் ஊடகம்*
*அட்டை வடிவமைப்பு, அச்சாக்கம்:* BS graphics,Chennai

*16 பக்கம்: நேச்சுரல் ஷேட் புக் ப்ரிண்ட்:*

***விலை : 10. 00***

*மின் நூலாகத் தரவிறக்க*
www.suyamariyathai.org

**நூல் கிடைக்குமிடங்கள்:**
**சென்னை:** *பெரியார் படிப்பகம், தோழர் பத்ரி நாராயணன் நினைவு நூலகம் 73 / 1 இலாயிட்ஸ் சாலை, சென்னை . 600 014 செல்9941613535* - **புதுச்சேரி:***இராவணன் படிப்பகம், இராதாகிருட்டிணன் நகர், அரியாங்குப்பம், புதுச்சேரி - 605007 - 9443045614* – **திருப்பூர்:** *பெரியார் படிப்பகம், 4 / 480 பாரதி நகர், வீரபாண்டி . அஞ்சல், திருப்பூர்.641605 செல் 9842088466* – **திருச்சி:** *பெரியார் புத்தக நிலையம், கண்டோன் மெண்ட்,ஸ்டேட்பேங்க் மண்டல அலுவலகம் எதிரில், திருச்சி. 620001 செல் 9865596940* – **மேட்டூர்:** *பெரியார் படிப்பகம், பேருந்து நிலையம் அருகில், மேட்டூர்அணை . 636 401 செல் 9786316155* – **கோபி:***மாவட்டத் தலைமை அலுவலகம், 53, நகராட்சி வணிகவளாகம் பேருந்து நிலையம் அருகில், கோபிச்செட்டிபாளையம் செல் 9894962333.*

# கீதை - ஒரு சமுதாய விரோத நூல்

- செங்குட்டுவன், திருச்செங்கோடு

## பொருள் முதல் வாதம்

*பண்டைக்காலந்தொட்டே இரு தத்துவப் பிரிவுகள் ஒன்றுக்கொன்று கடுமையாக மோதிக்கொண்டே வந்திருக்கின்றன. ஒன்று பொருள் முதல் வாதம் ; மற்றொன்று கருத்து முதல் வாதம். பொருள் முதல் வாதம் அறிவியலை அடிப்படையாகக் கொண்டது; மக்கள் நலனில் நாட்டம் கொண்டது;யதார்த்த உலகை, பிரபஞ்சத்தை அடிப்படையாகக் கொண்டது ; உண்மையை உள்ளவாறு எடுத்துரைப்பது ; விளக்குவது. பொருளியல் கருத்தியலுக்கு முன்னது. மனிதனது சிந்தனை திறள் பொருளியல் இன்றி நிலவ முடியாது என்றும் சிந்தனை என்பது மூளையின் விளை பொருளே என்றும், மூளை சிந்தனை உறுப்பு என்றும், புறநிலைப் பிரபஞ்சத்தின் மீது சார்பு இன்றி எதுவும் தனித்து இயங்க இயலாது என்றும் கூறுவது.*

## கருத்து முதல் வாதம்

*கருத்தியல் வாதம் முழுநிறைவு கொண்ட ஒரு பிற்போக்கு வாதமாகும்.அறியாமையோடும் மத்ததோடும் அய்க்கியப்பட்ட தாகும். சுயநலக்கும்பலின் சுரண்டல்வாதமாகும்.“சுரண்டுவோரின் எந்த அரசும் இந்தக் கருத்து மதுல் வாத சிந்தனையின் எப்பகுதியையாவது பெற்றே இருக்கும்”. இந்த வாதம் நிலவுபவை அனைத்திற்கும் தொடக்கமாக விளங்குவது உணர்வு ; சிந்தனை திறன், ஆன்மா என்கிறது. கருத்து முதல் வாதிகள் கருத்து, எண்ணம், உணர்வு, ஆன்மா ஆகியவையே முந்தியவை ; நாம் காணும் இப்பிரபஞ்சம் பிந்தியது என்கின்றனர். இத்தகைய கருத்த முதல் வாதத்தை அடிப்படையாகக் கொணடதுகள் நமது மதபோதகர்கள் போற்றும் கீதையும் இன்ன பிற நூல்களுமாகும். கீதை எத்தகைய பிற்போக்கு தத்துவத்தை, உண்மைக்கு முரணாண தத்துவத்தை மக்களின் அறிவையும், தன்னம்பிக்கையையும், அறிவியலையும் பாழ்படுத்தும் தத்துவத்தை கூறுகின்றது என்பதை பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்தில் காண்போம்.‘*

## கீதையின் கருத்து முதல் வாதம்

*கீதையை படிக்கும் மிகச் சாதாரண மனிதன்கூட அதிலுள்ள முரண்பாட்டை, அறியாமையை, அறிவுக்கு பொருந்தாத கற்பனையை, சமுதாயத்தை சீரழிக்கும் கருத்துக்களை துல்லியமாக உணரலாம்."இக்காயங்கள் (உடம்பு) அழியுமிடத்தும் நாம் இல்லாமற் போகமாட்டோம். தேகங்களுக்குள் இருக்கும் ஆத்மா அழிவற்றது. மாறுபாடு யாவும் உடலினுடையது. மாறாத் தன்மை ஆத்மா வினுடயது. மாறுபாடு என்பது ஆத்மாவுக்கு இல்லை; நித்தியமாய் உள்ளது. ஆத்மா பிறாவதது; இறவாதது; தேயாதது; வளராதது. காயங்கள் கொல்லப்படுமிடத்தும் ஆத்மா கொல்லப்படுதில்லை. பழுதுபட்ட துணிகளைக் களைந்துவிட்டு மனிதன் புதியவைகளை போட்டுக் கொள்வது போன்று ஆத்மா பழைய உடலங்களை நீத்துப் புதியன புகுகின்றது. ஆயுதங்கள் ஆத்மாவை வெட்டமாட்டா ; தீ அதை எரிக்காது; நீர் நனைக்காது; காற்றும் அதை உலர்த்தாது. இவ்வாத்மா வெட்டுண்ணான்; வேகாண்; களையான் ; உலரான்; இவன் நித்தியமாய்; நிறைவாய்; நிலையாய்; அசைவற்றவனாய் என்றுமிருப்பவன். இவ்வாத்மா பொறிகளுக்கு தென்படாதவன். சிந்தனைக்கு எட்டாதவன். மாறுபடாதவன்.*

*இவை உடல், ஆத்மா பற்றிய கீதையின் உள்ளங்கள். இவை அனைத்தும் கருத்து முதல் வாதமாகும்.*

## பிளேட்டோவின் கருத்து முதல் வாதம்

*இதைப்போன்று கருத்து முதல்வாத தத்துவத்தை பிளேட்டோவும் கூறியுள்ளார். "கருத்துக்கள் புறநிலையாக இயற்கை மீதும் பொருள்கள் மீதும், அவைகளின் சார்பு இன்றி நிலவுகின்றன. யதார்த்தப் பொருள்களைக் கொண்ட இப்பிரபஞ்சம் நிழல் போன்றது. பொருள் கருத்துக்களின் மங்கிய பிரதிநிதிகள்; நிழல்கள்" என்று கூறியுள்ளார். "உள்ளம், ஆத்மா, உடலின் சார்பு இன்றியே புலனறிவுக்கு அப்பாற்பட்டு பிரபஞ்சத்தில் நிலவுகின்றது. அது நித்தியமானது. ஆன்மா தற்காலிகமாக மட்டுமே மனித உடலில் குடி புகுகின்றது" என்றும் உரைத்துள்ளார்.*

## ஆன்மா என்பது அபத்தமாகும்

*பிரபஞ்ச பொருள்களானது - இப்பிரபஞ்சத்தில் பொருள்கள் இருக்கின்றன. மனிதனும் ஒரு பொருளே. மனித உறுப்புக்கள் யாவும் பொருள்களே ; மூளையும் பொருளே. பொருளாகிய மூளையின்*

செயல்தான் எண்ணம் - உணர்வு என்பது.( CHbsciHusbess is a Special prHduct Hf the activity Hf the humab oraib ) மூளைதான் உணர்வினை அளிக்கின்றது. கருத்தினைக் கொடுக்கின்றது. பொருள் இல்லையேல் - மூளை இல்லையேல் - எண்ணம் இல்லை; உணர்வு இல்லை. பொருள் இல்லையெனின் அதன் பிரதிபிம்பம் -வடிவம்- இல்லை. யதார்த்த உலகைப் படமாக்கும் ஆற்றல் மூளையினுடையது. பொருளாகிய மூளை இல்லையெனில் யதார்த்த உலகினைப் பற்றி உணர்வு இருக்கவே முடியாது. பொருளின் சார்பு இன்றி அப்பொருளால் உணடாக்கப்படும் ஒரு நிகழச்சி தனியே இருக்க முடியாது. எனவே ஆன்மா என்ற ஒன்று உண்டு ; அது பிரபஞ்சத்தில் பொருளுக்கு, மனித உடலுக்கு வெளியே உலவுகின்றது ; என்பது அபத்தமானது. பிரபஞ்சம் நிலவுகின்றது. அதன் மீது அது பற்றிய ஒன்று அதன் தொடர்பு இல்லாமல் நிலவுகின்றது என்பது கடைநிலைக் கற்பனையாகும். மனிதன் இயற்குகின்றான் ; அவன் மீது அவனது உடலுடன் தொடர்பு கொள்ளது, அவனது உடலுக்கு வெளியே அவனது உடல் பற்றிய ஒன்று ஆத்மா -இயங்குகின்றது எனபது அசல் பொய்மையேயாகும்.

## ஆன்மா பொருளாகாது

மூளையின் செயல், எண்ணம், உணர்வு என்பவை மூளையின் தனிப் பண்புகளாகும். தனிப் பண்புகள் பொருளாக (Mebtal activityï cHbsciHusbessï thHught is a Special prÊerty Hf matterï out bHt a Ëecial kibd Hf matter) எண்ணம் மூளையின் செயல்தான். இப்பிரபஞ்சத்திற்குரியது தான் ; வேறு எந்த "சாம்ராஜ்ஜியத்திற்கும்" உரியதன்று. எண்ணம் என்பது நாம் இவ்வுலகினைக் காண்பதால் ஏற்படும் விளைவுதானேயன்றி வேறன்று. (CHbsciHusbess is the ReflectiHb Hf the wHrld). பொருள்களிலிருந்து அவைகளின் எந்த ஒரு செயலையும் தனியே பிரிக்கமுடியாது.

## பொருளுக்கு முன் ஆன்மா எனபது குருட்டு வாதம்

பிரபஞ்சம் மனிதனுக்கு, மனித எண்ணத்திற்கு, மனித மூளையின் செயலுக்கு முன்னதாகவே இருக்கின்றது. மூளை செயல்படுவதற்கு, கருத்து உண்டாவதற்கு முன்னதாகவே பிரபஞ்சம் இருக்கின்றது. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக் கேற்ப மூளையும் வளர்ச்சி பெற்று வந்துள்ளது என்பதை நாம் இங்கு எண்ணிப் பார்த்தல் வேண்டும். மேலும் பிரபஞ்சம் தோன்றிய எண்ணற்ற ஆண்டுகளுக்குப் பிறகு தான் பூமியில்

உயிரினங்கள் தோன்றின என்பதையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். எனவே எண்ணம் - கருத்து என்பவை மனிதனுக்குத் தொடர்பு இல்லாதவை ; மனிதனுக்கு முன்னதாகவே ( PriHr tH Mab) இருந்தன என்னும் கருத்து முதல் வாத தத்தவம் முற்றும் தவறாகும். ஆன்மா என்பது மனிதனின் தோற்றத்திற்கு முன்னதாகவே இருந்தது ; மனிதன் தோன்றிய பிறகு அவனது உடலுக்குள் வந்த புகுந்து கொண்டது ; அயினும் புகுந்து கொண்டிருக்கும் உடலின் தொடர்பு இன்றியே அது இருக்கின்றது என்பது அறிவியலுக்கு, உண்மைக்கு மாறானவையே.

உயிரினங்கள் பரிணாம வளர்ச்சியில் மனிதனின் தோற்றம் மிகச் சிறப்பானதாகும். அதில் நரம்பு மண்டல வளர்ச்சி - மூளையின் வளர்ச்சி வியக்கத்தக்கதாகும். மூயையின் வளர்ச்சியில் பல ரசாயண நிகழச்சிகள் பங்கு கொண்டுள்ளன். ரசாயண மாற்றங்கள் நிகழா மாற்றங்கள் நிகழாதிருக்குமானால் மூளை வளர்ச்சி பெற்றிருக்க முடியாது. இப்படி வளர்ச்சி பெற்ற மூளை இல்லையெனின் எண்ணம், உணர்வு போன்ற நிகழ்ச்சிகள் கிடையாது. எனவே எண்ணம், கருத்து, ஆத்மா பொருளுக்கு முன்; இயற்கைக்கு முன் எந்த என்பது குருட்டு வாதமாகும்.

## பொருளால் ஆக்கப்படாதது ஏதுமில்லை

உடல் அழிந்தால், இல்லாமற் போனால் அதன் செயலும் இல்லாமற் போகும். இங்கே உடலில் தான் மூளை இருக்கின்றது. மூளைதான் எண்ணத்திற்கும் - ஆன்மாவிற்கும் காரணமாகும். எனவே அது உடலோடு தொடர்பு கொண்டிருக்கின்றது. உடல் அழியும் போது, மூளையும் அழிகின்றது; மறைகின்றது. அப்பொழுது மூளையின் செயலாகிய எண்ணம் - ஆத்மா எப்படி அழியாமல் இருக்கமுடியும்? மூளையையும் அதன் செயலையும் பிரிக்க முடியாது. எனவே செயலுக்குரிய ஆத்மாவுக்குரிய - மூளை மறைந்தபின் செயலும் - ஆத்மாவும் மறைந்தே போகும். பிரபஞ்சம் எல்லையற்றது. அதற்கு அப்பால் ஏதுமில்லை. இது சடப் பொருளால் ஆக்கப்படாத பொருள்கள் எதுவும் பிரபஞ்சத்தில் இல்லை. எனவே சடப்பொருளால் ஆகாத ஒன்று தனியே இருக்கின்றது என்பது அறியாமையேயாகும்

### பிரபஞ்சத்தால் பாதிக்கப்படாத ஒன்று பிரபஞ்சத்தில் ஏது ?

"இவ்வாத்மா வெட்டுண்ணான், வேகான், நனையான், உலரான், இவன் நித்தியமாய், நிறைவாய், நிலையாய், அசைவற்றவனாய், என்றுமிருப்பவனாம்."

"இவ்வாத்மா பொறிகளுக்குத் தென்படாதவன். சிந்தனைக்கு எட்டாதவன். மாறுபடாதவன் எனப்படுகிறான்." அதாவது இவர்களின் ஆத்மா உடலிலிருந்தாலும், பிரபஞ்சத்திலிருந்தாலும் எவ்வகையிலும் பிரபஞ்சத்தால் பாதிக்கப்படாமல் அப்படியே இருக்குகுமாம். பிரபஞ்சத்திலிருக்கும் ஒன்று பிரபஞ்சத்தால் பாதிக்கப்படாமல், பிரபஞ்சத்துடன் தொடர்பு கொள்ளாமல், சார்பு இல்லாமல் இருக்க முடியாது. இது அறிவியல் கண்ட உண்மை.

### சார்பு இன்றி எதுவும் தனித்து இருக்கமுடியாது

இடம் இல்லாமல் பொருள் இல்லை. பொருள் இல்லாமல் இடம் இல்லை. இருக்கவே முடியாது. எதுவுமே காலத்திற்குச் சார்பு இல்லாமல் அப்பாற்பட்டதாக இருக்க முடியாது. காலத்திற்கும் இடத்திற்கும் பிரிக்க முடியாத தொடர்பு உண்டு. பொருளும் காலமும் இடமும் பிரிக்க முடியாதவை. ஒன்றுக்கொன்று சார்புடையவை. மேலும், எதுவுமே காலத்திற்கும் இடத்திற்கும் அப்பால் வெளியில் இருக்கவே முடியாது. (nHthibg cab exist Hutside Hf time abd Space) இது தான் மாமேதை அய்ன்ஸ்டீன் மெய்பித்த சார்புக் கொள்கையாகும்.

நிற்கும் ட்ரெயினில் இருக்கும் நாம், ஓடும் ட்ரெயினைப் பார்த்தால் நாம் இருக்கும் ட்ரெயின் ஓடுவதாக தெரிகின்றது. ஆனால் பினாட்பாரத்தில் நின்று கொண்டிருப்பவர்களுக்கு ஓடும் ட்ரெயின் ஓடுவதாக தெரிகின்றது. எனவே நாம் பெறும் இயக்க உணர்வு நாம் இருக்கும் இடத்தைப் (Space) பொறுத்துள்ளது. இயக்கம் - அசைவு (mHtiHb) சார்பு தன்மையுடையது.

விண்வெளியில் இருக்கும் விண்வெளி வீரர்களுக்குத் திசை என்பதே கிடையாது. காரணம், திசையை வேறு ஒன்றுடன் தொடர்புபடுத்த சார்புபடுத்த அங்கு ஒன்றுமில்லை. எனவே திசை என்பது சார்பு தன்மையுடையது.

*காலம் - நேரம் என்பது உலகில் அனைத்து இடங்களிலும் ஒன்றாக இருப்பதில்லை. ஒரே சமயத்தில் கல்கத்தாவின் நேரத்திற்கும் பம்பாயின் நேரத்திற்கும் வேறுபாடு இருக்கின்றது. இந்தியாவின் நேரத்திற்கும் இங்கிலாந்தின் நேரத்திற்கும் ஐந்து மணிக்கு மேல் வேறுபாடு இருக்கின்றது. இடத்தைப் பொறுத்து காலம் வேறுபடுகின்றது. எனவே காலம் சார்பு தன்மையுடையது. ஆக இயக்கம் சார்புத் தன்மையுடையது. திசை சார்புத் தன்மையுடையது. காலம் சார்புத் தன்மையுடையது. எனவே பிரபஞ்சத்தின் சார்பு இன்றி, உடலின் சார்பு இன்றி , ஆன்மா என்ற ஒன்று இருக்கின்றது ; இயங்குகின்றது என்பது வெறும் கட்டுக்கதையே.*

*இப்பிரபஞ்சம் இயங்குகின்றது ; இயங்கிக் கொண்டே இருக்கின்றது. எந்தப் பொருளும் இயங்காமல் இருப்பதில்லை. இயக்கம் இல்லையெனில் பிரபஞ்சம் இல்லை. எலெக்ட்ரான்கள் இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அணுக்கள் இயங்குகின்றன. மூலக்கூறுகள் இயங்குகின்றன. மூலக்கூறுகளின் இயக்கந்தான் ரசாயண நிகழச்சிகளுக்கு காரணமாகும். பல்வேறு ரசாயண நிகழச்சிகளின் பயன்தான் புரதம், என்சைம் என்பவைகளாகும். புரதப்பொருள் தான் உயிர்கள் தோன்றக் காரணமானவை. எனவே இயக்கம்* (MHtiHb) *மாற்றம்* (Chabge) *வளர்ச்சி* (develÊmebt) *பொருள்களின் இயற்கயைான பண்புகளாகும். பிரபஞ்சத்தின் பொருள்களும் நிகழ்ச்சிகளும் மாறுதலும் வளர்ச்சியும் கொண்வை; பரஸ்பர தொடர்பு உள்ளவை. அசைவற்றன பிரபஞ்சத்தில் எதுவுமே இல்லை. ஆக அசையாமல், நிலையாய் ஒன்று இருக்கின்றது என்பது புரட்டேயாகும்.*

**'உண்மை' 14-10-1972**

## பிரபஞ்சத்தை எவனும் படைக்கவில்லை

*"மகரிஷிகள் எழுவரும், முன்னை மனுக்கள் நால்வரும் என் பிரபாவத்தோடு என் மனதில் உதித்தார்கள். உலகில் யாவும் அவர்களிடமிருந்து வந்தவைகள்"*

*" பார்த்தா ! பெரிய பிரகிருதி என் கற்பாசயம். அதில் நான் கற்பத்தை வைக்கின்றேன். அதினின்று உயிர்களெல்லாம் உற்பத்தியாகின்றன "*

*1.ரிஷிகளும் மகான்களும் உயிர்களை உண்டாக்கினார்கள்.*

*2. பிரம்மா என்னும் எனது கற்பாசயத்தில் நான் கற்பத்தை வைத்து உயிர்களை உண்டாக்கினேன்.*

*இவை இரண்டும் முரண்பட்டவை. ஒன்றுக்கொன்று மாறுபட்டவை. முன்பு என்ன சொன்னோம் என்பதைக் கூட எண்ணாமல் கிருஷ்ணன் பிறகு பொய்யுரைத்துள்ளான். இதை கீதை கீதை என்று ஒப்பாரி வைக்கும் பக்தர்கள் உணர வேண்டும். இவைகள் சிந்திக்காது புளுக வேண்டாமென்று நினைத்த கணத்திலேயே புளுகப்பட்டவைகளாகும். இவை அறிவியலை ஏளனம் செய்வதாகும்.*

*பிரபஞ்சத்தை எவனும் படைக்கவில்லை ; படைக்கவும் முடியாது. பிரபஞ்சம் என்றும் இருக்கின்றது. பிரபஞ்சத்தில் இருக்கும் பொருள்களிலிருந்து தான் உயிர்கள் உண்டாகின்றன. "உயிரினமானது மலையும் கடலும் பெற்றெடுத்த குழந்தை". இல்லாததிலிருந்து இருக்கும் எதையும் உண்டாக்கவே முடியாது. இருக்கும் பொருளை இல்லாமற் செய்ய முடியாது; இல்லாததைக் உண்டாக்க முடியாது. எனவே பிரபஞ்சத்தைப் படைத்தான்; உயிர்களை உண்டாக்கினான் ; அவைகளை இயக்குகின்றான்; ஆட்டுவிக்கிறான் என்று கூறுவது அறியாமையாகும். மேலும் பொருள்கள் யாவும் அவைகளுக்குரிய இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்டு தானே இயங்குகின்றன. இயக்கம் என்பது பொருள்களின் பண்பு. எனவே, தானே இயங்கும் பொருள்களை இயக்க எவனும் தேவை இல்லை.*

**பிரபஞ்சம் என்பது என்ன ?**

*கீதையின் கிறுக்கர்களுக்கு பிரபஞ்சம் பற்றிய திரு.கிரிகரின் இலக்கணத்தை தருகின்றேன்.*

*" நம்மை சுற்றியுள்ள அனைத்துமாகச் சேர்ந்தே பிரபஞ்சம். நமது காலடியில் உள்ள நிலமும் அதுவே. நமது தலைக்கு மேலுள்ள வானமும் அதுவே. அடுப்பில் சுடும் பணியாரமும் அதுவே . திண்ணையில் பந்து விளையாடும் சிறுவனும் அதில் அடங்கியவனே.*

*மழையும் அதுவே. மழையைச் சுமந்து வரும் முகிலும் அதுவே. அதை அடித்துச் செல்லும் காற்றும் அதுவே. சூரியன், சந்திரன், கிரகங்கள், நட்சத்திரங்களஃ. அந்த நட்சத்திரங்களுக்கு அப்பால் எது இருந்தாலும் அதுவும் அதுவே. பிரபஞ்சம் அங்கு இங்கு என்னாதபடி எங்கும் நிறைந்தது. அது அன்று இருந்தது; இன்று இருக்கின்றது ; இனியும் இருந்துவரும். "சர்வமும் பிரபஞ்சத்தில் அடங்கியதே"*

**மக்களை மடையர்களாக்குவன**

*"ஆதித்தியர்களுள் நான் விஷ்ணு; ஒளிர்பவைகளுள் கதிர் நிறைந்த ஞாயிறு நான்; மருத்துக்குள் மரீசி ; நட்சத்திரங்களுள் சந்திரன்."*

*"சூரியனிடமிருந்து உலக முழுவதையும் விளக்குகின்ற வெளிச்சமும்,சந்திரனுடையதும்,தீயினுடையதும்என்னிடத்திலிருந்து வந்த பிரகாசம்ட என்று அறிக"*

*ஒவ்வொரு மாதத்திற்கும் ஒவ்வொரு ஆதித்தர் உண்டாம். அவற்றுள் கிருஷ்ணன் தைக்குரிய விஷ்ணுவாம். நூற்பத்தொன்பது வாயு தேவதைகளுள் இவர் மரீசியாம்; சந்திரனாம்; சூரியனாம்.*

*இவை பிரபஞ்சம் என்றால் இன்னதென்று தெரியாத, அறியாத முட்டாள்தனமான உளறல்களாகும். சாதாரண அறிவு படைத்த ஒரு நேர்மையாளன் தனக்குத் தெரியாத ஒன்றை தெரியவில்லை என்று தான் ஏற்றுக்கொள்வான். தெரியாத ஒன்றை தெரிந்ததாகக் கூறி உலகை ஏமாற்ற முயலமாட்டான் ; மக்களை மடையர்களாக்க மாட்டான். அது தான் சான்றோனுக்கு, பண்பாளனுக்கு உரிய செயலாகும்.*

**காற்று**

*காற்று என்பது என்ன என்று ஆறாம் வகுப்பு மாணவனைக் கேட்டால் அது ஒரு கலவைப் பொருள்; அதில் நைட்ரஜன், ஆக்ஸிஜன், கார்பன்டை ஆக்சைடு, மந்த வாயுக்கள், தூசி, நீராவி ஆகியவை அடங்கியுள்ளன என்பான். குாற்றை தேவதை என்பது காட்டுமிராண்டி காலத் தொடக்க அறிவேயாகும்.*

### சூரியன்

சூரியன் என்பது ஹைட்ரஜன் (®ydrHgeb) வாயுவினாலும் ஹீலியம் (®elium) வாயுவினாலும் ஆன வாயுப் பொருள். அங்கு நான்கு ஹைட்ரஜன் அணுக்கள் இணைந்து ஒரு ஹீலியம் அணு உண்டாகிறது. ( 4 ர் + 1 ர்ந + நு) நு என்பது சக்தியாகும். இந்த ரசாயணச் செயலின்பொழுது சூரியன் ஒளியையும் வெப்பத் தையும் சக்தியாக வெளியிடுகின்றது. இங்கு அணுக்களின் இணைப்புச் செயல் ( ítHmic FussiHb ) நடைபெறுகின்றது. சூரியனில் ஒவ்வொரு விநாடியும் 56.4 கோடி டன் எடையுள்ள ஹைட்ரஜன் அணுக்கள்; 56.0 கோடி டன் எடையுள்ள ஹீலியம் அணுக்களாக மாற்றப்பட்டுன் கொண்டே இருக்கின்றன. ஆக சூரியன் ஒவ்வொரு விநாடியும் நான்கு மில்லியன் - 40 இலட்சம் டன் எடையை இழந்து கொண்டே இருக்கின்றது. இந்த இழப்பின் பயன்தான் நாம் பெறும் வெப்பமும் ஒளியுமாகும். அணுக் குண்டுகள் வெடிக்கும் பொழுது அணுக்கள் பிரிவதாலும் (ítHmic FissiHb) ஹைட்ரஜன் குண்டுகள் வெடிக்கும் பொழுது அணுக்கள் இணைவதாலும் (ítHmic FussiHb) அளவு கடந்த வெப்பச் சக்தியை வெளயிடுகின்றன்.

### சந்திரன்

சந்திரன் பூமியை சுற்றி வரும் ஒரு கிரஹம்; நட்சத்திரம் அன்று. அது பூமியை விட எடை குறைவான பொருள்களால் ஆனது. பாறைகளால் ஆனது. பூமியை விடச் சிறியது. மலைகளையும் பள்ளத்தாக்குகளையும் விண் வீழ் கற்கள் தாக்கியதால் ஏற்பட்ட ஆழமான சுரங்கம் போன்ற பெருங்குழி களையும் கொண்டது. அங்கு காற்றில்லை; ஈரமில்லை; உயிரினம் எதுவும் இல்லை; சந்திரனின் மேற்பகுதி புழுதியாலும் சிறு கற்களாலும் மூடப்பட்டிருக்கின்றது. மனிதன் சந்திரனின் மண்ணையும் கற்களையும் அள்ளிக் கொணர்ந்து உலகுக்குக் காட்டி விட்டான். அதற்கு இயற்கையான ஒளிவிடும் தன்மை இல்லை. இந்நிலையில் சந்திரனை நட்சத்திரம் - தானே ஒளி விடும் என்பதும் சூரியனின் ஒளியும் சந்திரனின் ஒளியும் வெவ்வேறானவை என்பதும் எத்தகைய அபத்தமான மதியீனம் என்பதையும் கீதை வெறியர்களும் கிருஷ்ண பக்தர்களுக்கு உணர வேண்டும்.

## கிருஷ்ண பக்தர்கள் சமூக விரோதிகளே

*மக்கள் அறிவியல் அறிவைப் பெறாத காலத்தில் ஏதோ சில சுயநல வெறியர்கள் சேர்ந்தோ, தனித்தோ புளுகிய பொய் மூட்டைகளை நம்புவது அறிவியலை இழிவுபடுத்துவதாகும் ; உண்மையை மறுப்பதாகும். சமுதாய வளர்ச்சியைப் பின் நோக்கித் தள்ளுவதாகும். சமுதாய வளர்ச்சிக்குத் தடையாக இருப்பவைகள் தூக்கி எறியப்பட வேண்டும்; அழிக்கப்படவேண்டும். சமுதாயத் தடைகளை, தீமைகளைப் பாதுகாத்து வளர்ப்பது சமுதாய விரோதச் செயலாகும். சமுதாய விரோத செயல்களை செய்பவர்கள் சமுதாய விரோதிகளாவார்கள். சமுதாய விரோதிகள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள். ஆக கீதை பக்தர்களும் கிருஷ்ண பக்தர்களும் சமுதாய விரோத குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட வேண்டியவர்களே*

## இயற்கையை இழிவுபடுத்துபவர்கள்.

*" மோக வலையில் மூடப் பெற்றவர்கள், காம போகங்களில் பற்றுடையவர்கள் பாழ் நரகில் வீழ்கின்றனர் "*

*இதைவிடப் பிரபஞ்ச நியதியை பெண்களை, இயற்கையை இழிவுபடுத்தும் கருத்து வேறொன்றும் இல்லை. ஆண் பெண் உறவு இயற்கையானது. இன வளர்ச்சி எனப்து பிரபஞ்ச நியதி ; ஒரு செல் உயிரிலிருந்து மனிதன் வரை அனைத்து உயிர்களுமே இன வளர்ச்சி செய்கின்றன. பால் உணர்வு ஒரு இயற்கையான உணர்ச்சி. புால் உணர்வு கொள்ளுங்கள்; இன வளர்ச்சி செய்யுங்கள் என்று எந்த உயிரினத்திற்கும் யாரும் கற்பிப்பதில்லை. குாமம், பால் உணர்வு பசி போன்றது; போகம் உணவு போன்றது. போகம் பாவம் என்றால் உணவு உண்பது மகாபாபமாகும்.புால்உணர்வு இல்லை என்றால் இன வளர்ச்சி இல்லை.இனவளர்ச்சி இல்லையென்றால் உயிரினம் இல்லை. ஊயிரினம் இல்லை என்றால் உலக விவகாரம் இல்லை; இவர்கள் கூறும் கடவுள் பசங்களுக்கு வேலை இல்லைமனித இனம் இல்லாத இடத்தில் கீதைக்கும் கீதை கிறுக்கர்களுக்கும் வேலையென்ன? யாரிடத்தில் இவர்கள் புளுகுவார்கள்! இவைகள் எல்லாம் எண்ணாது புளுகியே சமுதாயத்தை வெற்றி கொண்டிருப் பவர்களை நாட்டில் உலவவிடுவது நஞ்சுக்கிருமிகளை உலவவிடுவதற்கு ஒப்பாகும். கீதையின் கருத்துக்கள் சமுதாயத்திற்கு கேடு விளைவிப்பதாகும். சமுதாயக் கேடுகளை பின்பற்றுபவர்கள் சமுதாய கேடர்களே.*

**உண்மை’** 14-11-1972

## கீதை ஒரு சாதி வெறி நூல்

*"பிராமண, ஷத்திரிய, வைசிய, சூத்தரர்களுடைய கருமங்கள் அவரவர்கள் இயல்பில் உதித்த குணங்களுக்கு ஏங்ப பிரிக்கப் பட்டிருக்கின்றன. உழவும், கால்நடை காத்தலும் வணிகமும் இயல்பா யுண்டாகிய வைசிய கருமங்களாகும். இட்ட பணி இயற்றுவது சூத்திரனுக்ஃகு இயல்பாயுண்டாகிய கருமம்'; இந்த இருபதாம் நூற்றாண்டில் இத்தகைய புத்தகங்கள் இருக்கின்றன; மதிக்கப்படுகின்றன. இத்தகைய இழிகருத்துக்கள் ஆண்டவனால் கூறப்பட்டவை என்று பறை சாற்றப்படுகின்றன் பசனைகள் நடத்தப்படுகின்றன. ஆனால் நாம் கொஞ்சமும் வெட்கமின்றி தென்னாப்பிரிக்காவின் இனவெறிக் கொள்கையை கண்டிக்கிறோம். அவனாவது இனத்தின் அடிப்படையிலும், நிறத்தின் அடிப்படை யிலும், உடலமைப்பின் அடிப்படையிலும் கருப்பர்களை ஒதுக்குகிறான்; அத்தகைய இழிக்கொள்ளையப் பின்பற்றுகிறான். ஆனால் இங்கு ஒரு தாய் மக்கள் என்று சொல்லப்படுகின்ற வர்களிடையே, ஒரே கலாச்சாரத்தைப் பெற்றவர்களிடையே ஜாதிகள் தலைவிரித்தாடுகின்றன. ஆந்த ஜாதிகளும் ஆண்டவனால் ஆக்கப்பட்டவை; இயற்கையானவை; இயல்பாய் அம்மக்களிடையே ஏற்பட்டவை என்றும் கூறப்படுகின்றது. கூறப்படும் கீதையும் பாராட்டப்படுகின்றது.*

### பரமாத்வாவின் மடமை

*ஜாதி பாகுபாட்டை ஏற்படுத்தியவன் எவனாக இருப்பினும் சமுதாயக் கேடனே. இங்கே ஜாதிப்பாகுபாடு இயல்பானது என்று உபதேசம் செய்கிறான்.யார் ? கடவுள் கிருஷ்ணன். மனிதனாகிய அர்ச்சுணனுக்கு.மனித இனத்திற்கு ஜாதி பாகுபாடு இயற்கையானது என்றால் அதைப் போதிக்க கற்பிக்க கிருஷ்ணன் ஏன் ?*

*மேலும் ஜாதிப் பிரிவுகள் இயல்பானவை, இயற்கையானவை எனபது சதிகாரர்களின் சாகச் செயலாகும். உடலியல் அறியாதவர் களின் உளறல்களாகும். புசி, பால் உணர்வு, சீற்றம் போன்றவைகள் இயற்கை உணர்ச்சிகள் (Ibstibets) புறநிலை சூழ்நிலைகள் மனிதர்களால் ஆக்கப்படுபவை. ஆக்கப்படுபவை இயற்கையானவை களாக, இயல்பானவைகளாக ஆக முடியாது. இயற்கை உணர்வு இந்தியாவில் ஒன்றாகவும் இங்கிலாந்தில் வேறு விதமாகவும் இருக்காது. கீதையின் நான்கு ஜாதிகள் இந்தியாவைத் தவிர ஏனைய*

*நாடுகளில் ஏன் இல்லை? கிருஷ்ண பரமாத்மாவின் இயல்பு, இயற்கை, இந்தியாவிற்கு மட்டுந்தானா? அப்பரமாத்மாவின் உலக அறிவு அவ்வளவு தான்.*

**மக்கள் உணரவேண்டும்**

*இவைகள் எல்லாம் மக்கள் ஏமாந்த காலத்தில், ஏற்றங் கொண்ட சுயநலக்காரர்களால், பிற்போக்குவாதிகளால் மக்கள் இனம் பக்குவப்படாதிருந்த காலத்தில் புளுகப்பட்டவைகளாகும்; ஏழைகளை ஏமாற்றுவதற்கு எத்தர்களால் பக்குவமாகப் பயன்படுத்தப்படும் ஆயுதங்களாகும். கீதையைப் போற்றும் 'புனிதர்கள்' தங்கள் வாழ்க்கையில் இந்த மடமைக் கருத்துக்களைச் செயல்படுத்தி வாழ்கின்றார்களா எனின் இல்லை என்று தான் கூற வேண்டும். ஆனால் மக்களை ஏமாற்றுவதற்கு நல்லதொரு ஆயுதமாக கீதை பயன்படுவதால் தான் அதைப் போற்றுகின்றனர் என்பதை மக்கள் உணரவேண்டுகிறேன்.*

**'உண்மை'** 14-12-1972